**Workshop on "Think tank initiation for IPR Policy implementation" for University Faculty members to create awareness and know more about IPR issues during 26 & 27 July 2017**












**News Paper Clip**



▲ கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நேற்று தொடங்கிய அறிவுசார் காப்புரிமை பயிலரங்கில் மலரை வெளியிட்ட பல்கலைக்கழக துணைவேந்தர் ஆ.கணபதி. உடன், சென்னை அண்ணா பல்கலைக்கழக அறிவுசார் காப்புரிமை மைய இயக்குநர் எம்.கந்தபாபு உள்ளிட்டோர்.

# பாரதியார் பல்கலை.யில் அறிவுசார் காப்புரிமை பயிலரங்கம்

■ கோவை

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் அறிவுசார் காப்புரிமை மையம் சார்பில் 'அறிவுசார் காப்புரிமை சட்டத்தின் செயலாக்கம்' என்ற தலைப்பிலான பயிலரங்கம் நேற்று தொடங்கியது.

பல்கலைக்கழக துணைவேந்தர் ஆ.கணபதி தலைமை வகித்து பேசும்போது, "பாரதியார் பல்கலைக்கழக அறிவுசார் காப்புரிமை மையம் சார்பில் கடந்த ஓராண்டில் 6 காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன" என்றார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக அறிவுசார் காப்புரிமை மைய இயக்குநர் எம்.கந்தபாபு பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். அவர் பேசும்போது, "காப்புரிமை பெறுவதற்கான வழிமுறைகள் மத்திய அரசால் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் காப்புரிமைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், சர்வதேச அளவில் இந்திய பல்கலைக்கழகங்களின் தரம் உயரும். இது தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

இதில், பேராசிரியர்கள் ஆர்.சரவணசெல்வன், ஏ.ராஜேந்திரன், த.பரிமேலழகன், நடராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து, அறிவுசார் காப்புரிமை குறித்த மலர் வெளியிடப்பட்டது.